மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தங்கம்மாபுரி பட்டணத்தில் உள்ள கள்ளுக்கடை, மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டளையிட்டதன் மேல் மறுப்பேதும் இல்லாத வேறு ஒரு இடத்திற்கு அது தற்போது மாற்றப்பட்டுள்ளது.

முறையீடு வந்ததின் பேரில் ஜலகண்டாபுரத்தில் உள்ள சாராயக் கடையை வேறு இடத்திற்கு மாற்ற மேட்டூர் ஆயத் துறை தாசில்தார் கட்டளையிட்டார். ஆனால் கடை உரிமதாரர் மேல்—முறையீடு ஒன்றை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தாக்கல் செய்தார். இந்த மேல் முறையீட்டைத் தள்ளுபடி செய்தும், 15 நாட்களுக்குள் வேறு இடத்திற்கு மாற்றப்பட வேண்டும் என்றும், இல்லையென்றால் உரிமம் திரும்பப் பெறப்படும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவிட்டார். ஆனால் இவ்வுத்தரவு 17–3–1972 அன்று உரிமதாரரிடம் சேர்ப்பிக்கப்பட்டது. ஆனால் இவ்வுத்தரவை எதிர்த்து உரிமதாரர் உயர்நீதிமன்றத்தில் (சென்னை) ரிட் மனு தாக்கல் செய்ததின் பேரில் உத்தரவு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

தொட்டியம் பேரூராட்சிக்கு குடிநீர்த் திட்டம்.

***867. வினா—திரு. சி. க. வடிவேலு :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிரி வட்டம், தொட்டியம் பேரூராட்சிக்கு குடிதண்ணீர் விஸ்தரிப்புத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது துவங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) இந்த பஞ்சாயத்தின் நிதி நிலைமை தற்போது சரியாக இல்லாத காரணத்தால் இத்திட்டத்திற்கான ஆய்வு மதிப்பீட்டின் மொத்தத் தொகையை அரசே ஏற்றுக் கொள்வதற்கும், பின்னர் இத்தொகையை படிப்படியாக இப்பஞ்சாயத்து அரசுக்கு செலுத்து வதற்கும், அரசை குடிநீர் வடிகால் வாரியம் கேட்டுக் கொண்டுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

சீரணிப்படையின் பணிகள்.

***868 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

சீரணிப் படையின் பணிகளை மேலும் விரிவு படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

1972 ஏப்ரல் 4]

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : சீரணிப்படையின் பணிகளை மேலும் விரிவு படுத்தும் செயற்குறிப்பு தற்போது இல்லை.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : தலைவர் அவர்களே, மாவட்டந் தோறும் சீரணிப்படையின் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவரே நேரடியாகப் பார்வையிட்டு வருகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வேலைப்பளு அதிகமாக இருக்கிற காரணத்தால், சரியான முறையில் அதை கவனிக்க இயலவில்லை. ஆகவே, மாவட்டந்தோறும் தனித்தனியான அதிகாரிகளை நியமித்து, சீரணிப்படைகளின் வேலைகளை விரைவு படுத்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, இதற்கான நிதிவசதி ஏற்பட்டவுடனே கனம் உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து பரிசீலிக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்ட சீரணிப் படைத்தலைவர் இப்போது தமிழக அரசில் வேளாண்மைத் துறை அமைச்சராக ஆகியிருக்கிறார். ஆகவே, அந்த மாவட்டத்திற்கு புதிதாக ஒரு சீரணிப்படைத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்த மாவட்டத்தினுடைய சீரணிப்படையின் பொறுப்புகளை வகித்து வந்தவர் இப்பொழுது அமைச்சர் பொறுப்பை ஏற்றிருக்கிறார். எனவே முறைப்படி மாவட்ட சீரணித் தலைவர் நியமிக்கப்படுவார்கள்.

திரு வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, இந்த சீரணியின் சிறப்புகளைப் பற்றிய கருத்துக்களைப்பற்றி வெளிமாநிலங்கள் அறிக்கை கேட்டுள்ளதாக ஒரு செய்தி இருந்ததே, அதுபற்றிய குறிப்புக்கள் ஏதாவது இருந்தால் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாணபுமிகு திரு. என். வி. நடராசன் : மத்திய அரசிலிருந்து ஒரு அதிகாரி இதைப்பற்றி குறிப்புக்கள் கேட்டிருக்கிறார். அந்த விவரம் அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, சீரணியின் மூலமாக நம்முடைய தமிழகத்தில் எவ்வளவு தொகைக்கு பெறுமானமுள்ள வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ஏறத்தாழ சீரணி துவக்கி இதுவரையில் 1 கோடி ரூபாய் மதிப்புள்ள வேலைகள் செய்யப்பட்டிருக்

கிறது. ஆனால் அரசாங்கத்தின் மூலமாக சீரணிக்கு ஒதுக்கப்பட்ட தொகை ஏறத்தாழ 45 இலட்சம் ரூபாய் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆறுமுகம் : தலைவரவர்களே, இப்பொழுது சென்னையில் சீரணிப்படையினர் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும், மக்களை நேர்வழியிலே செலுத்தவும் போன்ற பல காரியங்களில் ஈடுபட்டுள்ளார்கள். இதே போல எல்லா மாவட்டங்களிலும் கிராமப் பகுதிகளிலும், நகரப்பகுதிகளிலும் இந்தச் சீரணி உதவி செய்யக்கூடிய அளவில் பயன்படுத்திக் கொள்ள திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, அதைப் பற்றியும் யோசிக்கப்பட்டு வருகிறது.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, இப்பொழுது சீரணியினர் ஒவ்வொரு கிராமத்திற்கும் பள்ளிக் கட்டடம் கட்டுதல், இணைப்புச் சாலைகள் அமைத்தல் போன்ற நல்ல பணிகளை ஆற்றி வருகிறார்கள். அதேபோல ஒவ்வொரு ஒன்றியத்திலிருந்து வரும் எல்லாப் பணிகளையும் சீரணிக்கே ஒதுக்கி அதன்மூலம் கட்டடம் கட்டுதல், சாலைகள் அமைத்தல் போன்ற அப்படிப்பட்ட வேலைகளைச் செய்ய அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, நிதி வசதி குறைவாக இருக்கிற காரணத்தினால் அந்த யோசனை ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. நிது வசதி ஏற்பட்ட பிறகு கனம் உறுப்பினரின் யோசனை பரிசீலனை செய்யப்படும்.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, சீரணியினால் இப்பொழுது நாட்டிலே நல்ல பல வேலைகள் நடந்து வருகின்றன. ஒவ்வொரு கிராமத்திற்கும் இரண்டு சீரணி ஊழியர்கள்தான் இருக்க முடியு என்று இப்பொழுது சொல்கிறார்கள். அதை மேலும் உயர்த்தி ஒவ்வொரு கிராமத்திற்கும் 5 உறுப்பினர்களையாவது சீரணியில் சேர்த்தால் இன்னும் நல்ல பணிகளைச் செய்ய முடியும். ஆகவே அதை அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, நான் ஏற்கனவே பதில் கூறியிருக்கிறேன், நிதிவசதி ஏற்பட்ட பிறகு அதை விஸ்தரிப்பதற்குரிய திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, நம்முடைய சீரணிப்படையினருக்கு வீர சிப்பாய்களைப்போல் பயிற்சி கொடுக்கிறார்கள். அப்படிப் பட்டவர்களுக்குத் துப்பாக்கிப் பயிற்சி கொடுப்பதற்கான முயற்சியிலே அரசு ஈடுபடுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் ; இதுபோன்ற யோசனை எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.